2014 பிப்ரவரி 19]

83—

புறவழிச் சாலை

***29255—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் எடுக்கும் பணி கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்துகொண்டிருப்பதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. மேலும், இந்தத் திட்டத்திற்கான நிதி போதுமான அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா? இதில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 16.88 கி.மீ. நீளத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி ரூ.2.07 கோடி செலவில் மேற்கொள்ள 13-7-2013 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி புறவழிச் சாலை அமைப்பதற்கு 12 கிராமங்களிலிருந்து மொத்தம் 48.92.24 எக்டர் நிலத்தை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் புறவழிச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நிலம் கையகப்படுத்தும் பணி என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆகவே, நிலம் எடுக்கும் பணி முடிவடைந்தவுடன் விரைவில் புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும் என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரில் செய்யாறு-ஆரணி, வந்தவாசி-ஆரணி, சேத்துப்பட்டு-ஆரணி, போளூர்-ஆரணி, தேவியாறு-ஆரணி ஆகிய சாலைகளை இணைத்து புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அதனை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*